## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி
## அ.வ.எண்.43/2021

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி பி. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சரவணன் | மதம் | : இந்து |
| த/பெ | : கோபால் ரெட்டி | ஜாதி | : -- |
| வயது | :48 | கிராமம் | : நாபலூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**23.07.2025**
**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு சொந்த ஊர் நாபலூர் என்றால் சரிதான். பிரதிவாதிகள் கே.கே சத்திரத்தை சேர்ந்தவர்கள் என்றால் கூளூரை சேர்ந்தவர்கள். நாபலூருக்கும் கூளூருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 கி.மீ இருக்கும். நான் கூளூருக்கு அடிக்கடி போவேனா என்றால் எப்போதாவது போவேன். வாதி பிரதிவாதிகளை எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் நிலத்தரகு வேலைசெய்கிறேன். அதனால் எனக்கு அவர்களை தெரியும். 2007ல் துரைசாமி நாயுடுக்கு வயதாகி கண் தெரியாமல் காது கேட்காமல் இருந்தார் என்றால் அவர் சுயநினைவுடன் ஆட்டோவில் இருந்து இறங்கி பத்திர அலுவலகத்திற்கு வந்தார்.

2. 2007ல் துரைசாமி நாயுடுக்கு வயதாகி கண் தெரியாமல் இருந்தார் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உயில் ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த சொத்து துரைசாமி நாயுடுக்கு பாத்தியம் என்பதை காட்டும் ஆவணங்கள் எதையும் நான் பார்த்தேனா என்றால் அசல் ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் சரிபார்த்து சம்மதமா என்று அவரிடம் கேட்டார்கள். அவர் சம்மதம் என்று கையெழுத்து செய்தார். நான் சாட்சி கையெழுத்து செய்தேன். அந்த சொத்து துரைசாமி நாயுடுக்கு பாத்தியம் என்பதை காட்டும் ஆவணங்கள் எதையும் நான் பார்த்தேனா என்றால் நான் ஆவணங்களை பார்க்கவில்லை.

3. உயில் எத்தனை ரூபாய்கான முத்திரையில் எழுதப்பட்டது என்பது தெரியுமா என்றால் நான் கவனிக்கவில்லை. மேற்படி சொத்து துரைசாமி நாயுடுவின் மனைவி கமலம்மாளுக்கு அவரது தாயார் செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்றாலும் துரைசாமி நாயுடுக்கு அந்த சொத்து பாத்தியமே இல்லை என்றாலும் துரைசாமி நாயுடு ஜெயராம நாயுடுக்கு உயில் எழுதி வைத்தது மட்டும்தான் எனக்கு தெரியும். துரைசாமி நாயுடுவை ஜெயராம நாயுடு பராமரித்து வந்தார் என்று நான் சொல்லியிருப்பதில் அதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் ஜெயராமன் நாயுடுதான் என்னிடம் சொன்னார். நான் நேரடியாக பார்க்கவில்லை. ஜெயராம நாயுடு அவரது வாக்குமூலத்திலேயே அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. உயில் ஆவணத்தில் நான் எத்தனையாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றால் நான் 2வதாக சாட்சி கையெழுத்து செய்தேன். முதல் சாட்சி யார் என்றால் மோகன் ஆவார். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கனகம்மாசத்திரத்தை சேர்ந்தவர். துரைசாமி நாயுடு உயிலில் கையெழுத்து செய்தாரா கைரேகை வைத்தாரா என்றால் கைரேகைதான் வைத்தார். உயிலை யார் எழுதினார்கள் என்பது தெரியுமா என்றால் ஞாபகமில்லை. உயிலில் உள்ள சொத்து எத்தனை ஏக்கர் என்பது தெரியுமா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. உயிலில் சொத்து மதிப்பு குறிப்பிட்டிருந்ததா என்றால் அதை நான் கவனிக்கவில்லை. எனக்கும் ஜெயராம நாயுடுக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் அவர் பக்கத்து ஊர் என்பதால் தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. ஜெயராம நாயுடு அழைத்து நான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். ஜெயராம நாயுடு எனது நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலே சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)